பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**19 08 2026** **WEDNESDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) கும்மிடிப்பூண்டி — **Gudur** இடையே மூன்றாவது மற்றும் நான்காவது ரயில் வழித்தடத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2) சர்வதேச தரத்திற்கு இணையாக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3) தொல்லியல் அகழ்வாய்வுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு 10 கோடி ரூபாயாக உயர்த்தப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது

4) முதலமைச்சர் அலுவலக மாற்றத்திற்கான பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோராமல் எப்படி தொடங்க முடியும் என்று பிஜேபி வினவியுள்ளது.

5) ஆசிய ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

கும்மிடிப்பூண்டி — **Gudur** இடையே மூன்றாவது மற்றும் நான்காவது ரயில் வழித்தடத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், 2 ஆயிரத்து 229 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக கூறினார்.

<<<<<>>>>>>

நாடு முழுவதும் சாலைப்பணிகள் தரமாக நடைபெற வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தரத்தில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

சர்வதேச தரத்திற்கு இணையாக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு நிதின்கட்கரி கூறினார்.

<<<<<>>>>>>

தொல்லியல் அகழ்வாய்வுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு 10 கோடி ரூபாயாக உயர்த்தப்படுவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — ராஜ்மோகன் - 49 Sec. )***

<<<<<>>>>>>

முதலமைச்சர் அலுவலக மாற்றத்திற்கான பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோராமல் எப்படி தொடங்க முடியும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதற்கு முன்பு ஒப்பந்தப் புள்ளிகள் கோராமல் பணிகள் நடைபெற்றதா என்றும் வினவியுள்ளார்.

இதுதொடர்பான அனைத்து விவரங்களையும் மக்கள்முன் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ஆதவ் அர்ஜூனா சமர்ப்பிக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

மேகதாதுவில் அணை கட்ட தங்கள் கட்சி அனுமதிக்காது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு மாணிக்கம் தாகூர் கூறியுள்ளார்.

இன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேகதாது அணை கட்ட கர்நாடகாவிற்கு மத்திய அரசு உதவக்கூடாது என்று கூறினார்.

காவிரியில் தமிழகத்திற்குரிய நீரை கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என்றும் திரு மாணிக்கம் தாகூர் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு **3** ரூபாய் தமிழக அரசு உயர்த்தியுள்ளது போதுமானது அல்ல என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் பால் கொள்முதல் விலை கடந்த நான்கு ஆண்டுகளாக உயர்த்தப்படாததை சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் நிறுவனங்கள் ஆவின் கொள்முதல் விலையைவிட லிட்டருக்கு **12** ரூபாய் வரை கூடுதலாக வழங்குவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 7 ரூபாய் அளவுக்காவது உயர்த்த தமிழக அரசு முன்வர வேண்டும் என்றும் திரு அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>>

மாணவர்கள் மற்றும் இளையோரின் ஜனநாயக உரிமைகளை தமிழக அரசு பறிக்கக்கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இன்று சென்னையில் நடைபெற்ற அக்கட்சியின் மாநில செயற்குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 30 ஆண்டுகளாக நடைபெறாமல் உள்ள கல்வி நிறுவனங்களின் மாணவர் பேரவைத் தேர்தல்களை உடனடியாக நடத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதை தவெக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் திரு டி டி வி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாள்தோறும் கொலை, கொள்ளை மற்றும் பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நடைபெறுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

குற்றங்கள் நடைபெறாமல் இருப்பதை தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை முதலமைச்சர் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு டி டி வி தினகரன் கோரியுள்ளார்.

<<<<<>>>>>>

உலக புகைப்பட தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, முதலமைச்சர் திரு விஜய் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் வாழ்நாள் நினைவாக மாற்றுவதோடு, வார்த்தைகளால் சொல்ல இயலாத நிகழ்வுகளை கலைநயம் மிக்க புகைப்படங்களால் உணர்த்தும் புகைப்பட கலைஞர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்

***(Sound Byte — வி ஆர் துரை - 52 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் மத்திய அரசின் மக்கள் நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு மற்றும் பயனாளிகள் பதிவு முகாமினை ஆட்சியர் டாக்டர் சுகபுத்ரா இன்று தொடங்கிவைத்தார்.

------------------

மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா இன்று ஆய்வு செய்தார்.

------------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி பத்மஜா தலைமையில் இன்று நடைபெற்றது.

------------------

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குப்பைகளை தரம் பிரிக்கும் திடக்கழிவு மேலாண்மை மையத்தின் செயல்பாடுகளை ஆட்சியர் திருமதி சினேகா இன்று ஆய்வு செய்தார்.

----------------

வேளாங்கண்ணி புனித ஆரோக்கியமாதா ஆண்டு பெருவிழாவிற்கான முன்னேற்பாட்டுப்பணிகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் ஆட்சியர் திரு பிரவீன்குமார் தலைமையில் இன்று நடைபெற்றது. இந்த திருவிழா வரும் **29-**ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் **8-**ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

மும்பையில் நடைபெற்ற இப்போட்டியின் **Rapid** பிரிவில் **Vivaan Vishal-**லும், **Shohradova-**ம் இப்பதக்கங்களை கைப்பற்றினர்.

இப்போட்டியில் இந்தியா **4** தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

------------------

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், **21-8, 21-10** என்ற செட் கணக்கில் இலங்கையின் **Dumindu Abeywickrama-**வை வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் — சிராக் ஷெட்டி இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-------------------

**20** வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Tanu Sharma** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஸ்லோவேக்கியாவின் **Bratislava**-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் **72** கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **11-0** என்ற புள்ளிக்கணக்கில் அஜர்பைஜானின் **Zahra Karimzada**-வை வென்றார்.

-------------------

உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா — பாகிஸ்தான் இடையேயான ஆட்டம் நெதர்லாந்தின் **Amstelveen**-ல் சற்றுமுன் தொடங்கியது.

-------------------

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இந்தியா **165** ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

**Galle**-ல் நடைபெற்ற இப்போட்டியின் ஐந்தாவது மற்றும் இறுதி நாளான இன்று 372 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடனும், 4 விக்கெட் இழப்பிற்கு 84 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் இரண்டாவது இன்னிங்கை தொடர்ந்து ஆடிய இலங்கை, 206 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**Sonal Dinusha** அதிகபட்சமாக 84 ரன் எடுத்தார்.

**Manav Suthar** அபாரமாக பந்துவீசி 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்தியா முதல் இன்னிங்சில் 462 ரன்னுக்கும், இரண்டாவது இன்னிங்சில் 193 ரன்னுக்கும் ஆட்டமிழந்தது.

இலங்கை முதல் இன்னிங்சில் 284 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இரண்டு போட்டிகளை கொண்ட இந்த தொடரின் இரண்டாவது ஆட்டம் கொழும்பில் வரும் 23-ஆம் தேதி தொடங்குகிறது.

<<<<<END>>>>>>